## IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.

**O.S.No. 65/2020** **P.W.3**

Deposition of witness for solemnly affirmed byTmt.S.Sangeetha, Assistant of this court on 16.02.2026 in accordance with the provision of the Act 1873.

| | | |
|---|---|---|
| Name | : | தமிழ்ச்செல்வி<br>(சேந்தமங்கலம் மண்டல துணை வட்டாட்சியர்) |
| Husband Name: | : | செல்வராஜ் |

**முதல் விசாரணை தொடர்ச்சி**

ஏற்கனவே முன்னாள் தாசில்தார் திரு.சீனிவாசன் அவர்கள் 07.02.2024ம் தேதியன்று சாட்சியமளித்து சா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்து சாட்சியமளித்துள்ளார். தற்போது பணியில் உள்ள தாசில்தார் சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள வட்டாட்சியருக்காக அனுமதிக் கடிதத்தின் பேரில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். மேற்படி வட்டாட்சியர் மண்டல துணை வட்டாட்சியருக்கு கொடுத்த அனுமதிக்கடிதம் **சா.சா.ஆ.6**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

எந்த சர்வே எண்ணிற்கு சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் ச.எண்.290/2ற்கு சாட்சியமளிக்க வந்துள்ளேன். மேற்படி ச.எண்.290/2சொத்து தற்போது யாருடைய பெயரில் உள்ளது ராமசாமிகவுண்டரின் மகன் பொன்னுசாமி கவுண்டர் மற்றும் சின்னுசாமி மகன் ராமசாமி என்பவரின் பெயரில் கூட்டாக பதிவாகியுள்ளது. ச.எண்.290/2ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 000.87 சதுரமீட்டராகும். ச.எண்.290/2ற்கான புலவரைபடம் சா.சா.ஆ.5 தவிர வேறு ஏதேனும் புலவரைபடம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சா.சா.ஆ.5ல், ச.எண்.290/1, 290/2 உட்பிரிவிற்கான தனித்துக்காட்டும் வகையில் எல்லை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

ச.எண்.290/10 யார் பெயரில் உள்ளது என்றால் தற்சமயம் சிட்டாபடி துரைசாமி மக்கள் செல்வம்-1 சிவசேகர்-2 மற்றும் ராணி-3 ஆகியோர்கள் பெயரில் உள்ளது. மேற்படி ச.எண்.290/10 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 000.81.0 சதுரமீட்டர் ஆகும். ச.எண்.290/11 யார் பெயரில் உள்ளது மற்றும் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் செல்வம்-1, செ.ராணி-2 பெயரில் உள்ளது, விஸ்தீரணம் 000.90.5 சதுரமீட்டர் ஆகும்.

**மறுவிசாரணை - இல்லை.**

Sd/-E.Ridhula
DM,SDM.

Sd/Tamilselvi(PW3)